Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 37/2022**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | புஷ்பம் | ஜாதி | : | |
| த/பெ | : | பரமானந்தம் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | ஆண்டரசன்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.01.2026.

(1 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் ஆண்டரசன்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.07.2018 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் எனது மகள் மெர்சி வீட்டில் சமயல் செய்துகொண்டிருந்தபோது, எனது மகள் வீட்டிற்கு வெளியே விறகு காய வைத்திருந்ததை எதிரி சகாயராஜ் அவரது இருசக்கர வாகனத்தில் அந்த விறகு மீது ஏறி சென்றார். நான் அதை பார்த்து சத்தம் போட்டேன். அப்போது சகாயராஜ் என்னை பார்த்து அவுங்க ஆயி கூதியில் காயப்போட வேண்டியது தானே என்று தகாத வார்த்தையால் திட்டினார். அதற்கு நானும் அவரை சத்தம் போட்டேன். அப்போது விமல்குமார் என்னை செறுப்பால் அடித்தார். செல்லத்துரை அரிவாளை எடுத்துக்கொண்டு என்னை வெட்ட வந்தார். அப்போது சகாயராணி, எலிசபெத், மேரி ஆகியோர் என்னை பிடித்துக்கொண்டார்கள். அப்போது எனது வீட்டிற்கு அருகில் இருந்த தென்னை மட்டையை வைத்து கட்டியிருந்த படகை எதிரிகள் சேதப்படுத்திவிட்டார்கள். சேதப்படுத்தப்பட்ட சொத்து மதிப்பு ரூ.1000/- இருக்கும். பின்னர் உடனே கன்னிவாடி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவம் தொடர்பாக எதிர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் படி புகார் மனு கொடுத்தேன். அவர்கள் எந்த

நடவடிக்கையும் எடுக்காததால் நான் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor